## கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
## சட்ட பீடம்

### சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு II (இணையம் மூலமானது) – 2021

## ஒப்பந்தச் சட்டம்
(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**

எவையேனும் **மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. அ) ஒஷானா என்பவள் அவளுக்காக வீடொன்றினைக் கட்டுவதற்காக "Green Vision" எனும் கட்டிட நிர்மாண கம்பனியொன்றுடன் ஒப்பந்தமொன்றில் ஈடுபட்டாள். Green Vision ஆனது வருண் எனும் ஓர் தொழிற்திறமையுள்ள அலங்கரிப்பாளனை வேலைக்கு அமர்த்தும் என்பதுன் உட்புற வடிவமைப்பானது ஒஷானாவினுடைய எதிர்பார்ப்புகளுக்கு அமைவாக தனியாக மேற்கொள்ளப்படும் எனவும் திறத்தவர்களிடையே ஒப்புக்கொள்ளப்பட்டது. ஒஷானா ஸ்பானிய வடிவமைப்பொன்றினைக் கேட்டாள். Green Vision ஆனது, ரூபா. 1,000,000 இனை பொருட்களுக்காகவும் அத்துடன் ரூபா. 300,000 இனை அவனது சேவைகளுக்காகவும் வருணுக்கு வழங்குவதற்கு உடன்பட்டது. இருப்பினும், Covid-19 பெருந்தொற்றின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருந்த இறக்குமதி மட்டுப்பாடுகளின் காரணமாக பொருட்களின் விலை அதிகரித்தது. குறித்த பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான மேலதிகத் தொகையினைச் சமாளிப்பதற்கு வருண் அவனது சொந்தப் பணத்தைச் செலவிட நேரிட்டது. இதற்கிடையில், ஒஷானா அவளது மனதை மாற்றியதுடன் ஸ்பானிய வடிவமைப்பிற்குப் பதிலாக இத்தாலிய வடிவமைப்பொன்றினை வேண்டினாள். இதன் விளைவாக, வருண் இத்தாலிய வடிவமைப்பினைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தமையினால் வேலையினை ஆரம்பித்தல் தாமதமடைந்தது. Green Vision ஆனது இது தொடர்பில் அறிந்திருந்த போதிலும் எந்தவொரு எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. வருண் ரூபா. 200,000 இனை பொருட்களுக்கெனவும் ரூபா. 150,000 இனை அவனது சேவைகளுக்குமென மேலதிகமாகக் கோருகிறான்.

பிரதிபயன் தொடர்பான சட்டத்தை ஏற்புடைமை செய்து பின்வருவனவற்றை ஆராய்க.

i. வருண் மேலதிகக் கொடுப்பனவிற்கு உரித்துடையவனா?

ii. வருணுடைய மேலதிகக் கொடுப்பனவிற்கான கோரிக்கை மறுக்கப்படின் Green Vision மற்றும் ஒஷானாவிற்கு எதிராக அவன் வாக்குறுதி முரண்தடக்கல் கோட்பாட்டினைப் பயன்படுத்த முடியுமா?

(2 X 30 = 60% புள்ளிகள்)

ஆ) அல்பிரட் என்பவன் உற்பத்தி வியாபாரமொன்றினைக் கொண்டு நடாத்துவதற்காக கம்பனி ஒன்றினை கூட்டிணைக்க விரும்பினான். அல்பிரட் அவனது நண்பியும் சட்டத்தரணி ஒருவருமான ஒஷானா என்பவளை அணுகி கம்பனியைக் கூட்டிணைப்பதற்கான சட்ட உதவியை நாடினான். ஒஷானா தேவையான அனைத்தையும் மேற்கொண்டாள் என்பதுடன் குறித்த கம்பனியானது கூட்டிணைக்கவும் பட்டது. பின்னர், வியாபாரம் நல்ல நிலையில் இடம்பெற்ற காலப் பகுதியில் குறித்த கம்பனியைக் கூட்டிணைப்பதற்கு வழங்கப்பட்ட அவளது சட்ட சேவைக்காக ரூபா. 200,000 இனை ஒஷானாவிற்கு வழங்குவதாக அல்பிரட் வாக்குறுதியளித்தான். இருப்பினும், Covid-19 இன் காரணமாக வியாபாரம் நல்ல நிலையில் போகவில்லை என்பதுடன் அவன் வாக்குறுதி அளித்ததிலிருந்து சில மாதங்களுக்குப் பிறகு அல்பிரட் குறித்த கம்பனியினுடைய அரைவாசிப் பங்குகளை கீசெலா என்பவளுக்கு விற்றான். ஒப்புக்கொள்ளப்பட்ட அக் கொடுப்பனவினை ஒஷானா அல்பிரட்டிடமிருந்து கோரினாள் எனினும் அவர்களுக்கிடையில் வலிதான ஒப்பந்தம் எதுவும் இல்லை எனக் கூறி அவன் அதை மறுத்தான்.

i. அல்பிரட்டிற்கு எதிராக அவளுக்கு வலிதான ஓர் கோரிக்கை உள்ளதா என்பதைக் கண்டறிய ஒஷானா உமது ஆலோசனையை நாடுகிறாள். ஒஷானாவிற்கு ஆலோசனை வழங்குக.

ii. மேலே சொல்லப்பட்ட அரைவாசிப் பங்குகளின் விற்பனைக்கு மேலதிகமாக அல்பிரட் அவனது சொந்தப் பங்குகளில் 5% இனை கீசெலாவிற்குக் கைமாற்றியதுடன் குறித்த கொடுப்பனவினை ஒஷானாவிற்கு வழங்கும்படி அவளிடம் வேண்டியிருப்பின் கீசெலாவிற்கு எதிராக ஒஷானா வலிதான ஓர் கோரிக்கையினைக் கொண்டிருக்க முடியுமா என ஆராய்க.

(40% புள்ளிகள்)

2. ராமல் என்பவன் கட்டிட நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்களுடன் ஈடுபடுவதான வியாபாரத்தைக் கொண்டு நடாத்திக் கொண்டிருந்தான். அவன் ஜா-எல நகர சபைக்கு (YMC) உடற்பயிற்சிக்கூடம் ஒன்றைக் கட்டுவதற்கான கேள்விப் பத்திரங்களுக்கு அழைப்பு விடுக்கின்றதான விளம்பரமொன்றைக் கண்டான் என்பதுடன் ரூபா. 250 மில்லியனுக்கான கேள்விப்பத்திரமொன்றைச் சமர்ப்பித்தான். குறித்த விளம்பரத்திற்கு அமைவாக குறைவான

தொகையைக் கொண்ட கேள்விப்பத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் நிர்மாணப் பணியானது நவம்பர் 2021 இல் ஆரம்பித்தலும் வேண்டும். சந்தையில் சீமெந்திற்கான தட்டுப்பாடொன்று ஏற்படலாம் என எதிர்பார்க்கப்பட்டமையினால் ராமல் குறைந்தது 5000 சீமெந்து பைகளையாவது சேகரித்து வைக்க விரும்பினான். அவன் சீமெந்து விநியோகத்திற்கான சிறந்த விலை தொடர்பில் அவனுடைய வழக்கமான விநியோகத்தரான சிறில் என்பவனிடம் மின்னஞ்சல் மூலமாக விசாரித்தன். 22 ஆகஸ்ட் 2021 அன்று, “50kg பை ஒன்றினுடைய அதிகபட்ச விலை ரூபா.1450 ஆக இருக்கும்” என சிறில் மின்னஞ்சல் மூலமாக ராமலுக்கு அறிவித்தான். ராமல் ஒன்று ரூபா. 1400 என்ற விலைக்கு 5000 சீமெந்து பைகளைத் தான் கொள்வனவு செய்ய விரும்புவதாகவும் அத்துடன் தமக்கிடையிலான நீண்டகால வியாபார உறவினைக் கருத்திற் கொண்டு சிறில் இதற்கு உடன்படுவான் என தான் நம்புவதாகவும் குறிப்பிட்டு அதே நாளன்று அவன் சிறிலுக்கு ஓர் உரைச் செய்தியினை (Text message) அனுப்பியிருந்த போதிலும் ராமல் அவனது அச் செய்திக்கு எந்தவொரு பதிலையும் பெற்றிருக்கவில்லை. ஏற்கனவே சந்தையில் சீமெந்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையை உணர்ந்த ராமல் ரூபா. 1450 என்ற விலையில் சீமெந்தினைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்தான் என்பதுடன் அடுத்த நாளே அவனது கம்பனியினுடைய அமைப்பு முறையில் கொள்வனவுக் கட்டளை ஒன்றையும் அனுப்பினான். ராமலின் ஊழியனுடைய கவனக் குறைவின் காரணமாக தேவைப்படும் தொகையானது குறித்த கொள்வனவுக் கட்டளையில் குறிப்பிடப்படவில்லை. 24 ஆகஸ்ட் 2021 அன்று விலை, கொடுப்பனவுத் தெரிவுகள் மற்றும் தொகையாக 4000 பைகள் போன்றவற்றை உள்ளடக்கியதான விற்பனையாளரின் குறிப்பொன்றினை சிறில் ராமலுக்கு அனுப்பினான். 1 செப்டெம்பர் 2021 அன்று ராமலினுடைய கேள்விப்பத்திரம் தெரிவு செய்யப்படவில்லை என YMC இனால் அவனுக்கு அறிவிக்கப்பட்டது. பைசல் என்பவனுடைய ரூபா. 252 மில்லியனுக்கான கேள்விப் பத்திரம் தெரிவு செய்யப்பட்டுள்ளதென்பதை அவன் பின்னர் அறிந்தான்.

ஒப்பந்த உருவாக்குதலுடன் தொடர்புடைய சட்டத்தின் மீது கவனஞ் செலுத்தி ராமலுக்கு ஆலோசனை வழங்குக. உமது விடையினை தீர்ப்புச் சட்டத்தால் ஆதாரப்படுத்துக.

(100 புள்ளிகள்)

3. அ) Blue Solution Ltd (BSL) என்பது உரங்கள் தயாரிப்பதில் முன்னணியான ஓர் கம்பனியாகும். அது 2019 இல் புதிய உரமொன்றினை வெற்றிகரமாக சந்தைப்படுத்தியது. மைக்கல் என்பவன் 2010 இலிருந்து BSL இனுடைய ஓர் வழமையான வாடிக்கையாளன் என்பதுடன் அவன் குறித்த புதிய உரத்தில் 500kg இனைக் கொள்வனவு செய்ததுடன் அதனை அவனது நிலத்தில் பயன்படுத்தினான். அவனது நிலத்திலுள்ள மண்ணுக்கு அப்புதிய உரம் பொருத்தமற்றது என்பதனால் மைக்கலினுடைய பயிர்கள் நாசமாகியது. பின்னர் அவன் அம் மண்ணைப் பரிசோதித்தான் என்பதுடன் குறித்த புதிய உரமானது அவனது மண்ணின் ஈரப்பதத்

தன்மையினை அதிகமாகப் பாதித்திருப்பதையும் அவன் பயிர்களுக்கு வழக்கத்திலும் பார்க்க அதிக தடவைகள் நீரூற்றியிருக்க வேண்டும் என்பதையும் அதன் விளைவாக குறித்த நிலமானது ஆறு மாதங்களின் பின்னர் மாத்திரமே அடுத்த பயிர்ச் செய்கைக்கு தயாராக இருக்கும் என்பதையும் அறிந்தான். மைக்கல் தான் அனுபவித்த இழப்பினை BSL இடமிருந்து கோரிய போது குறித்த உரத்தைப் பயன்படுத்துவதற்கு முன் மண்ணானது பரிசோதிக்கப்பட வேண்டும் என்பதுடன் குறித்த பொருளினால் ஏற்படுத்தப்பட்ட எந்தவொரு இழப்பு, பொறுப்பு அல்லது சேதத்திற்கும் கம்பனி பொறுப்பேற்காது எனக் குறிப்பிடுவதான முக்கியமான ஓர் அறிவித்தலை ஒவ்வொரு உரப் பையும் உள்ளடக்கியிருந்தது எனக் குறிப்பிட்டு எந்தவொரு பொறுப்பபையும் அது மறுத்தது. குறித்த அறிவித்தலானது பையினுடைய பின் பக்கத்தில் மிகச் சிறிய எழுத்துக்களில் ஆங்கிலம் உள்ளடங்கலாக பல்வேறு மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளதை மைக்கல் கண்டறிந்தான். கடந்த காலத்தில் BSL இனுடைய உரங்களைப் பயன்படுத்த முன்னர் தான் ஒரு போதும் மண்ணைப் பரிசோதித்ததில்லை என மைக்கல் வாதிட்டான்.

பொருத்தமான அதிகாரங்களை மேற்கோள்காட்டி மைக்கலுக்கு ஆலோசனை வழங்குக.

(60% புள்ளிகள்)

ஆ) BSL ஆனது ஜேம்ஸ் என்பவனிடமிருந்து அச்சடிக்கப்பட்ட ஒரு மில்லியன் பிளாஸ்ரிக் பைகளினை சமமான நான்கு தவணைகளில் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தமொன்றில் ஈடுபட்டது. குறித்த பைகள் 50kg அளவுடைய உரத்தினை சுமப்பதற்கு போதியளவு உறுதியாக இருத்தல் வேண்டும் என BSL ஜேம்ஸிற்கு அறிவித்தது. குறித்த விற்பனை உடன்படிக்கையானது 'ஒவ்வொரு ஒப்படைப்பின் பின்னரும் உடனடியாக கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் இவ் வாசகத்தைச் செயற்படுத்தத் தவறுகின்றமையானது விற்பனையாளர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கான உரிமையினை வழங்கும்' எனக் குறிப்பிடும் ஓர் வாசகத்தை உள்ளடக்கியிருந்தது. முதலாம் தவணை ஒப்படைப்பு மேற்கோள்ளப்பட்டிருந்த போதிலும் குறித்த பைகள் 50kg உரத்தை இட்டு நிரப்புகின்ற போது கிழிந்தன என்பதனால் அவர்களது நோக்கம் தோல்வியடைந்ததாகக் குறிப்பிட்டு BSL கொடுப்பனவைச் செலுத்த மறுத்தது. BSL ஒப்பந்தத்தை முடிவுறுத்தவும் அத்துடன் செலுத்தப்பட்ட முன்பணம் மற்றும் சேதஈடுகள் என்பவற்றை ஜேம்ஸிடமிருந்து கோரவும் விரும்புகின்றது. BSL ஒப்பந்தத்தை மீறியுள்ளதாக ஜேம்ஸ் வாதிடுகிறான்.

பொருத்தமான அதிகாரங்களை மேற்கோள்காட்டி பிணக்குகளை ஆராய்க.

(40% புள்ளிகள்)

4. ஒப்பந்தங்களைச் செயலிழக்கச் செய்யும் காரணிகளுடன் தொடர்புடைய சட்டத்தை ஏற்புடைமை செய்வதன் மூலம் பின்வரும் பிணக்குகளை ஆராய்க. நீர் உமது விடைக்கான காரணங்களைத்

தருவதுடன் கோட்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பவற்றின் பின்னணியில் பாதிக்கப்பட்ட திறத்தவர்களுக்கு கிடைக்கத்தக்க பரிகாரங்கள் மீது கவனம் செலுத்துமாறும் வேண்டப்படுகின்றீர்:

அ) கமிலியா என்பவள் பெப்ரவரி 2019 இல் சீட்டிழுப்பொன்றில் வெற்றி பெற்றாள். 'Clean Drive' எனும் வாகனம் சுத்தம் செய்யும் கம்பனி ஒன்றின் உரிமையாளரான விநீத் என்பவன் முகநூல் வழியாக கமிலியாவினுடைய ஓர் நண்பனானான். அவள் சீட்டிழுப்பொன்றில் வெற்றி பெற்றாள் என்பதை விநீத் அறிந்தான் என்பதுடன் அவள் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் அவனது வியாபாரத்தில் பங்காளராவதற்கு அழைப்பு விடுத்தான். குறித்த முதலீட்டினால் மூன்று மாதங்களுக்குள் அம் முதலீட்டுத் தொகையினை இரட்டிப்படையச் செய்வான் என அவன் வாக்குறுதியளித்தான். கடந்த மூன்று மாதங்களுக்குள் பெறப்பட்ட இலாபங்களுக்கான ஆவணங்களை விநீத் அவளுக்குக் காட்டினான். கமிலியா பணத்தை முதலீடு செய்தாள். விநீத் வாக்குறுதியளித்தபடி பணம் இரட்டிப்படையவோ அல்லது வியாபாரம் முன்னேற்றமடையவோ இல்லை. விநீத்தினுடைய முன்னாள் பங்காளர் விநீத்தை விட்டுப் பிரிந்து சென்றதுடன் அருகிலேயே அதையொத்த வியாபாரமொன்றை ஆரம்பித்திருப்பதையும் அத்துடன் அதனை விநீத் கமிலியாவிற்கு தெரியப்படுத்தவில்லை என்பதையும் கமிலியா பின்னர் அறிந்து கொண்டாள்.

கமிலியாவிற்கு ஆலோசனை வழங்குக.

(40% புள்ளிகள்)

ஆ) கோஷல் என்பவன் இரு காணித் துண்டுகளைச் சொந்தங் கொண்டிருந்தான் என்பதுடன் அவற்றில் ஒன்று சோளப் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமாகக் காணப்பட்ட வேளையில் மற்றையது நெற் பயிற்செய்கைக்கு பொருத்தமானதாகக் காணப்பட்டது. அவன் அவற்றுள் ஒன்றை ரவின் என்பவனுக்கு நான்கு வருடங்களுக்கு குத்தகைக்கு விடுவதற்கு கொடைமுனைவு மேற்கொண்டான். ரவின் குத்தகைக்கான கொடுப்பனவு விவரங்களைப் பற்றி விசாரித்தான் என்பதுடன் அது மாதாந்தம் ரூபா. 31,250/- மற்றும் ரூபா. 1,500,000 என அவனுக்கு அறிவிக்கப்பட்டது. செலுத்தப்பட வேண்டிய தொகையானது மாதாந்த வாடகையான ரூபா. 31,250/- மாத்திரமே என்பதுடன் ரூபா. 1,500,000 ஆனது நான்கு வருட காலத்திற்கும் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை என ஊகித்துக்கொண்டு ரவின் அக் கொடைமுனைவினை ஏற்றான். உண்மையிலேயே, கோஷல் திருப்பிச் செலுத்தப்படாததான ஓர் முன்பணமாக ரூபா. 1,500,000/- இனை வேண்டினான் என்பதுடன் அக் காணிக்குள் ரவின் நுழைவதை அனுமதிப்பதற்கு முன்பாக அவன் அதைக் கோரினான். ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கு முன்னர் இது அவனுக்கு தெரியாது என வாதிட்டு ரவின் முன்பணத்தைச் செலுத்த மறுத்தான்.

i. ரவின் மற்றும் கோஷல் ஆகியோருக்கிடையிலான ஒப்பந்தத்தின் வலிதாந் தன்மை தொடர்பில் ஆராய்க.

ii. ரவின் குத்தகைக்கென ஒப்பந்தம் செய்த நெற் பயிற் செய்கை மேற்கொள்வதற்கான காணியானது வேறொருவருக்கு ஏற்கனவே குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்பதுடன் சோளம் பயிரிடப் பொருத்தமான காணிக்கு ரவின் ஒப்பந்தம் செய்யக் கருதியிருக்கவில்லை எனின் நிலைமை என்னவாயிருக்கும்?

(30 X 2 = 60% புள்ளிகள்)

5. அ) திரு மற்றும் திருமதி பெரேரா ஆகியோர் ராமா என்பவனால் சொந்தங் கொள்ளப்பட்டிருந்த கடைத் தொகுதியொன்றில் கடந்த மூன்று வருடங்களாக துணிக் கடை ஒன்றை குத்தகைக்கு எடுத்திருந்தனர். திரு மற்றும் திருமதி பெரேரா ஆகியோர் அவர்களது மகனான நினோ என்பவன் தொடர்ச்சியான கவனத்தைத் தேவைப்படுத்தும் குணப்படுத்த முடியாத நோயொன்றினால் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டறிந்தமையினால் அவனைப் பற்றி மிகவும் கவலையடைந்தனர். குறித்த துணிக்கடை மீதான குத்தகைக் காலமானது முடிவடையும் தறுவாயில் இருந்தமையினால், குத்தகையினை அவர்கள் புதுப்பிக்க விரும்புகிறார்களா என அவனுக்கு விரைவில் அறிவிக்க வேண்டும் என ராமா அவர்களுக்கு கூறுகிறான். நினோவினுடைய சுகவீனம் மற்றும் தேவைகள் என்பவற்றை அறிந்திருந்தமையினால் புதிய ஐந்து-ஆண்டு குத்தகையினை கணிசமான அளவு அதிகரித்த ஓர் வாடகையில் மத்திரமே வழங்க முடியும் என ராமா மேலும் கூறுகிறான். திரு மற்றும் திருமதி பெரேரா ஆகியோர் அவர்களது மகனைப் பார்த்துக் கொள்வதற்காக ஓய்வுபெற விரும்பிய போதிலும் அவர்களால் அக் கடையிலிருந்து வரும் வருமானத்தினை இழக்க முடியவில்லை. ஆகவே, அவர்கள் தயக்கத்துடன் அக் குத்தகைக்கு கையொப்பமிடுகின்றனர்.

திரு மற்றும் திருமதி பெரேரா ஆகியோர் அவ் ஒப்பந்த்ததை தவிர்க்க விரும்புகின்றனர். அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

(40% புள்ளிகள்)

ஆ) சரத் என்பவன் இலங்கையில் நன்கு அறியப்பட்ட பால்பண்ணை கம்பனி ஒன்றினைச் சொந்தங் கொண்டிருந்தான் என்பதுடன் அவனது வியாபாரமானது ஓர் பண்ணை, ஓர் தொழிற்சாலை மற்றும் கால்நடைகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. அவன் விலங்குகளில் பிரியங் கொண்டிருந்தான் என்பதுடன் சில அரிய இனங்களைச் சேர்ந்த விலங்குகளையும் அவனது பண்ணையில் கொண்டிருந்தான். அவன் தனிப்பட்ட காரணங்களுக்காக அவனது சொத்துக்களை விற்பதற்குத் தீர்மானித்தான் என்பதுடன் மிகிர எனும் சாத்தியமான கொள்வனவாளர் ஒருவனைக் கண்டறிந்தான். 200 மில்லியன் எனும் ஒன்றுதிரட்டப்பட்ட பெறுமானத்தைக் கொண்ட உடன்படிக்கையானது சரத் மற்றும் மிகிர ஆகியோருக்கிடையில் கையொப்பமிடப்பட்டது என்பதுடன் அது குறித்த பண்ணை, தொழிற்சாலை மற்றும் விலங்குகளின் விற்பனைக்காக மூன்று தனிப்பட்ட பகுதிகளைக் கொண்டிருந்தது. ‘பாதுகாக்கப்பட்ட விலங்குகள் தொடர்பாக ஏதேனும் வர்த்தகம் அல்லது வியாபாரத்தினைக் கொண்டு நடாத்துதல் அல்லது மேற்கொள்ளுதல்’ ஓர் குற்றமாகும் என ஏற்பாடு செய்கின்ற

விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டதான சில விலங்குகளையும் குறித்த பண்ணையின் கால்நடைகள் உள்ளடக்கியிருந்தன என்பதை மிகிர பின்னர் அறிந்தான். மிகிர அப் பண்ணையினுள் செல்வதற்கும் அத்துடன் வேறு இடத்திலிருந்து கறவை விலங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கும் விரும்பனான். குறித்த பண்ணை விற்கப்படுமாயின் அவனது விலங்குகளை வளர்ப்பதற்கு அவனுக்கு இடமிருக்காது எனக் குறிப்பிட்டு சரத் அதனை அனுமதிக்க மறுத்தான்.

பொருத்தமான அதிகாரங்களை மேற்கோள்காட்டி இதன் சட்ட விளைவுகள் தொடர்பில் ஆராய்க.

(60% புள்ளிகள்)

6. சாமர மற்றும் பாத்தியா ஆகியோர் Ceylon Cricket Club (CCC) இற்காக கிரிக்கெட் விளையாடுகின்றனர். CCC உடன் அவர்கள் கையொப்பமிட்ட ஒப்பந்தமானது ஏனைய விடயங்களுக்கிடையில் பின்வரும் வாசகங்களை உள்ளடக்குகின்றது:

- அவர்கள் விளையாடுவதற்கென சங்கம் தேவைப்படுத்தக் கூடியதான அனைத்து விளையாட்டுகளிலும் விளையாட்டு வீரர் விளையாடுவதற்கு உடன்படுகின்றார்.
- சங்கம் தேவைப்படுத்தக் கூடியதான அத்தகைய பயிற்சி அமர்வுகளுக்கு தான் சமூகமளிப்பேன் மற்றும் பங்குபெறுவேன் என விளையாட்டு வீரர் உடன்படுகின்றார்.
- சங்கமானது விளையாட்டு வீரருக்கு வருடாந்தம் ரூபா. 1 மில்லியன் செலுத்துவதற்கு உடன்படுகின்றது.
- ஒப்பந்த காலத்தின் போது ஏனைய சங்கங்களுக்காக விளையாடுவதிலிருந்து குறித்த விளையாட்டு வீரர் தடுக்கப்பட்டுள்ளார்.
- இவ் உடன்படிக்கையின் ஏதேனும் வாசகத்தினை விளையாட்டு வீரர் மீறுகின்ற சந்தர்ப்பத்தில் தண்டப்பணமொன்றாக அல்லாது தீர்மானிக்கப்பட்ட சேதஈடாக ரூபா. 5 மில்லியனைக் கோருவதற்கு சங்கம் உரித்துடையதாதல் வேண்டும்.

பாத்தியா ‘‘அகில இலங்கை கிரிக்கெட் போட்டி’ யில் விளையாடப்பட்ட ஐந்து விளையாட்டுக்களிலும் விளையாடியிருந்த போதிலும் நிரற்படுத்தப்பட்ட அனைத்துப் பயிற்சி அமர்வுகளையும் அவன் தவற விட்டான். சாமர ஓர் விளம்பரத்தின் புகைப்பட படப்பிடிப்பொன்றில் பங்கெடுக்க வேண்டியிருந்தமையால் இரண்டு விளையாட்டுக்களைத் தவற விட்டான். CCC ஆனது அப் போட்டியில் அனைத்து விளையாட்டுக்களிலும் தோல்வியடைந்தது. இதன் விளைவொன்றாக, CCC இனுடைய விளையாட்டு வீரர்கள் தகுதியற்றவர்கள் மற்றும் அர்ப்பணிப்பற்றவர்கள் என்பதனால் CCC அதன் நற்பெயரை இழந்து விட்டது எனக் குறிப்பிட்டு அதற்கு நிதியுதவி அளிப்பவர்கள் நிதியுதவிக்கான உடன்படிக்கைகளைப் புதுப்பிக்க மறுத்தனர். CCC வங்குறோத்துக்குச் செல்லும்

நிலையிலிருப்பதை உணர்ந்துகொண்ட சாமர 'Western Cricket' எனும் போட்டிச் சங்கத்தில் இணைவதற்கு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட்டான். CCC ஆனது பயிற்சி அமர்வுகளில் அவன் பங்குபெறவில்லை என்பதனால் அவனது ஒப்பந்தம் முடிவுறத்தப்பட்டது எனக் குறிப்பிட்டு பாத்தியாவிற்கு அறிவித்தது.

CCC ஆனது ஒப்பந்த மீறல் மற்றும் அவர்களது நிதியுதவி ஒப்பந்தங்களை இழந்தமைக்கான சேதஈடுகள் என்பவற்றுக்காக சாமரவிற்கு எதிராக வழக்கிட விரும்புகிறது. ஒப்பந்த வாசகங்கள், ஒப்பந்த மீறல் மற்றும் சேதஈடுகள் என்பவற்றுடன் தொடர்புடைய சட்டத்துடன் விசேடமாகத் தொடர்புறுத்தி CCC மற்றும் பாத்தியாவிற்கு ஆலோசனை வழங்குக.

(100 புள்ளிகள்)

(ஒவ்வொரு வினாவும் 100 புள்ளிகளுக்கு மதிப்பிடப்படும்)

********************